ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/23 - 2019 ජනවාරි මස 09 වැනි බදාදා - 2019.01.09

*2105/23 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட (திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் திருத்த மீளாய்வு அங்கீகாரம் தொடர்பான அறிவித்தல்*

*(திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்துடன் சேர்த்துக் கொள்வதற்காக முன்மொழியப்பட்ட திருத்தத்திற்கான மீளாய்வு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது என 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(ஊ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனால் மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8எ ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8ஏ ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனால் (1999 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒரு திருத்தமாக இருக்கின்ற) (திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 7.18 ஆம் பிரிவின் ஏற்புடைய திருத்தத்தை இத்தால் நான் அங்கீகரிக்கின்றேன்.*

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 7.18 ஆம் பிரிவின் திருத்தம்.*

*1. (இதனகத்துப் பின்னர் (திருத்தப்பட்ட) 1999 மற்றும் 2008 ஆம் ஆண்டின் பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 7.18 ஆம் பிரிவு, பின்வருமாறு சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

> *“கொழும்பு நகரின் அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் கட்டட நிர்மாண ஒழுங்குவிதியில் படிவம் C இல் உள்ள வழிகாட்டல்களின் கீழ் தரப்பட்ட பாதையின் அகலத்தின் அடிப்படையில் தரப்பட்ட அபிவிருத்தி ஒன்றுக்கான மாடிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது என்பதோடு அதில் தொடர்புருகின்ற அணுகுவழி ஆகக்குறைந்தது 12 மீட்டர்கள் (40 அடி) அகலத்தைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றுப் பாதைகளையும் மற்றும் தனிப்பட்ட அணுகு வழிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு*

*அவசியமான அங்கீகாரத்தை வழங்குவதற்கான அதிகார சபைக்கு உரித்தளிக்கப்பட்ட அத்தகைய தீர்மானத்துக்கு அமைவாக அத்தகைய ஒவ்வொரு அணுகுவழியும் ஆகக் குறைந்தது 6 மீட்டர்கள் அலகத்தைக் கொண்டிருக்க வேண்டும் ".*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க,
மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

*2017, யூலை 14.*

**கவனத்தில் கொள்ள வேண்டியது :** இந்த ஒழுங்குவிதிகள் 2017 யூலை மாதம் 14 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

*01-558*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.